செ.வெ.எண்: 45 நாள்:17.11.2021

**பெரம்பலூர் மாவட்டம்**

**வேப்பந்தட்டை மிகவும் பிற்படுத்தபட்டோர் நலத்துறை கல்லூரி மாணவர் விடுதியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

பெரம்பலூர் மாவட்டத்தில் 14 பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ,மாணவியர்கள் விடுதிகளும் 20 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ,மாணவியர் விடுதிகளும் உள்ளன. இவ்விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் அனைத்து மாணவ/ மாணவியர்களுக்கும் உணவு, உறைவிடமும் மற்றும் பள்ளிகளில் பயிலும் மாணவ,மாணவிகளுக்கு நான்கு இணை சீருடைகள், இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இன்று (17.11.2021) வேப்பந்தட்டையில் அமைந்துள்ள மிகவும் பிற்படுத்தபட்டோர் நலத்துறை கல்லூரி மாணவர்கள் விடுதியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இவ்வாய்வின்போது விடுதியில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும், மாணவர்களின் வருகை பதிவேடு குறித்தும், விரிவாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள். வருகை பதிவேட்டில் உள்ள வருகைக்கு ஏற்ப உணவுகள் தயார் செய்யப்பட்டுள்ளனவா என்று ஆய்வு செய்தார். மேலும், உணவு பொருள் சேமிப்பு அறை, சமையல் செய்யும் அறை மற்றும் உணவருந்தும் கூடம் சுத்தமாக பராமரிக்கப்படுகிறதா எனவும், சுத்தமான குடிநீர் வழங்கபடுகிறதா எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார் மேலும் விடுதியில் உள்ள மாணவர்களுக்கு டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் வகையில் விடுதி வளாகத்தினை தூய்மையாக பராமரிக்க வேண்டும் என்று விடுதிக் காப்பாளருக்கு அறிவுறுத்தினார்.

**பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாணவர்களிடம் பேசுகையில்:**

கல்லூரியில் பயின்றுவரும் நீங்கள் 2ம் ஆண்டு, 3ம் ஆண்டு பயிலும்போதே வேலைவாய்ப்புகள் மற்றும் தொழில்கள் குறித்து அறிந்து கொள்ள வேண்டும், மாவட்ட தொழில் மையம் அலுவலகத்திற்கு சென்று தொழில் துவங்குவதற்கு என்னென்ன வாய்ப்புகள் உள்ளது என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் துறை தேர்வுகள் குறித்து தெரிந்து கொள்ளும் வகையில் தகுதிகள், தேர்வு நடைபெறும் நேரங்கள், சம்பளம் குறித்த விவரங்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு சென்று அவைகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்ளும் வகையில் ஸ்போக்கன் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள வேண்டும். முக்கிய கால கட்டத்தில் உள்ள நீங்கள் ஸ்போக்கன் இங்கிலீஷ் தெரிந்து கொள்ளவும், பல்வேறு வேலை வாய்ப்புகள் தொழில் வளர்ச்சி குறித்து தெரிந்துகொள்ள விடுதியிலேயே பயிற்ச்சியளிக்க ஏற்பாடு செய்யப்படும். நீங்கள் ஈடுபாட்டுடனும், அக்கறையுடனும் செயல்பட்டால் எளிதாக வெற்றி அடைய முடியும். மேலும் விடுதியில் தங்கி பயிலும் அனைவரும் தங்கள் படிப்பில் முழு கவனமும் செலுத்தி தங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து எசனை ஆதிதிராவிடர் அரசு தொடக்கப் பள்ளியில் மாணவ,மாணவிகளின் வருகை குறித்தும், அவர்களுக்கு வழங்கப்படும் உணவு முறைகள் குறித்தும், மாணவ,மாணவிகளுக்கு கல்வி கற்பிக்கப்படும் முறைகள் குறித்தும், பள்ளி வளாகம் சுத்தமாக பராமரிக்கப்படுகிறதா எனவும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின்போது மாவட்ட பிற்படுத்தபட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ரமணகோபால், தனி வட்டாட்சியர்(ஆதி திராவிடர் நலம்) திரு.சத்தியமூர்த்தி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், பெரம்பலூர்.**